# WORD OF CHRIST

## கிறிஸ்துவின் வசனம்

மரம் 7 ஆகஸ்டு 1998 கனி 1

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல
ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜூனன்

## ஆசிரியர் கடிதம்

வாசகர்களுக்கு,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. ஏழாவது வருட இதழின் தொடக்கத்தில் உங்களை இக்கடிதத்தின் மூலம் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

எவ்வளவோ ஆபத்துக்கள், துக்கங்கள், மனச்சஞ்சலங்கள் மற்றும் போராட்டங்களுக்கு மத்தியிலும் தொடர்ந்து இவ்விதழை வெளியிட கிருபை செய்த தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். கடந்த ஆண்டில் 51 பேர் வேத அறிவுப்போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றிருப்பதை குறித்து என் தேவனுக்கு நன்றி சொல்லுகிறேன். இவர்கள் பெரோயா பட்டணத்தார்களைப் போல வேத வசனத்தை ஆராய்ந்து பார்த்தது குறித்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

இவ்விதழ் 1992ல் ஆகஸ்டு மாதம் 100 பிரதிகள் 4 பக்க அளவில் அச்சிட்டு வெளியிட்டோம். அப்பொழுது 50 வாசகர்கள் இருந்தனர். தேவகிருபையால் இம்மாதம் 1000 பிரதிகள் 16 பக்க அளவில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது. தற்போது 600 வாசகர்கள் இருக்கிறார்கள். கர்த்தருக்கு சித்தமானால் இல்லந்தோறும் இவ்விதழ் இருக்க முயற்சிக்கின்றோம்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக

அன்புடன்
ஆசிரியர்.

**இதழின் உள்ளே . . .** — பக்கம்


1. குற்றமற்ற ஜீவியம் ........ 1
2. இரட்சிக்கப்பட ஒருவன் என்ன செய்ய வேண்டும்? ........ 4
3. ஜெபிப்போம் ........ 7
4. சிந்தனைக்கு ........ 11
5. சிறுவர் பகுதி (யோனா) ........ 8
6. ஜூலை மாத இதழின் விடைகள் ........ 8
7. ஜூலை மாத வேத அறிவுப்போட்டியில் வெற்றி பெற்றவர்கள் ........ 11
8. இம்மாத வேத அறிவுப்போட்டி (அட்டையின் உள்ளே) ........ 13
9. திருமணம் - கிறிஸ்தவ குடும்பம் ........ 12
10. 1997 ஆகஸ்டு முதல் 1998 ஜூலை வரை வெற்றி பெற்றவர்கள். ........ 11
11. படைப்பின் ஒழுங்கும், வீழ்ச்சியும் (பெண்கள் பகுதி) ........ 9
12. இருதயம் ........ 10



Published by

**WORLD LITERATURE PUBLICATIONS**

*POST BOX NO. 5, BATLAGUNDU - 624 202*

**SOUTH INDIA.**

# கிறிஸ்துவின் வசனம்
# WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 7 | ஆகஸ்டு 1998 | இதழ் 1


ஆசிரியருரை

## குற்றமற்ற ஜீவியம்
## Blameless Life



"உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும் போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக" (1 தெச. 5:23) என வேதத்தில் வாசிக்கின்றோம். இவ்வுலகத்தில் ஜீவிக்கிற நாம் எப்படி வேண்டுமானாலும் ஜீவிக்கலாம் என்பதல்ல. குற்றமற்ற ஜீவியத்தையுடையவர்களாக இருக்க வேண்டும். குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்பார்கள். மனிதன் குற்றம் செய்யும் போது தலைநிமிர்ந்து நடக்க முடியாமல் அவதிப்படுவதை நம் அனுதின வாழ்க்கையில் பார்க்கிறோம். குற்றமுள்ள வாழ்க்கையின் முடிவு "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23) என வேதம் சொல்லுகிறது. இவ்வுலகத்தையும், நம்மையும் சிருஷ்டித்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மீண்டும் வரப்போகிறார். அவர் வரும் போது ஆவி ஆத்துமா சரீரம் இம்மூன்றையும் ஒரே மண்பாண்டத்தில் பெற்ற நாம் குற்றமற்றவர்களாயிருக்க வேண்டியது மிக அவசியமாயிருக்கிறது.

ஆவிக்குரிய ஜீவியம் என்றால் கிறிஸ்தவ வட்டாரத்தில் தெரியாத ஒன்றல்ல. நாங்கள் ஆவிக்குரிய சபைக்குச் செல்லுகிறோம், நாங்கள் ஆவிக்குரிய ஆராதனை செய்கிறோம், என்றெல்லாம் அடுக்கிக் கொண்டே போவார்கள். உங்களது ஆவிக்குரிய ஜீவியத்தில் பரிசுத்த ஆவியானவர் மூலம் கொடுக்கப்பட்ட வசனங்களுக்கு முழுமையாக கீழ்படிகிறீர்களா என்று கேட்டால், என்னிடத்தில் ஒரே ஒரு தவறு தான் இருக்கிறது மற்றபடி என்னுடைய ஜீவியத்தில் வேறு தவறு ஒன்றுமில்லை என்பார்கள். "எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான விசேஷத்தைச் சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும், பரிசுத்த ஆவிக்கு விரோதமாய் தூஷணஞ் சொல்லுகிறவனுக்கோ மன்னிக்கப்படுவதில்லை" (லூக்கா 12:10) என்று வாசிக்கின்றோம். வேத வசனத்திற்கு விரோதமாகவோ அல்லது கீழ்படியாமலோ இருந்தால் இது ஆவிக்குரிய குற்றமாகும்.

"ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்" (கலாத்தியர் 6:8). ஆவி தன்னை தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் ஒரு நாள் போகப்போகிறது. ஆகையால் நாம் ஆவிக்குரிய ராஜ்யத்திற்காக ஆவியில் ஜெபித்து, ஆவிக்குரிய காரியங்களுக்குக் கொடுத்து உதவும் போது ஆவயினாலே நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்வோம். அதிலே எந்தவித சந்தேகமுமில்லை. "ஆவியை அவித்துப்

போராடுங்கள்" (1 தெச. 5:13) என்று பார்க்கிறோம். ஆவியிலே எப்பொழுதும் அனலாயிருந்து கர்த்தருக்குப் பிரியமாக ஜீவிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். நம்முடைய ஆவி அணைந்து போவதால் காரிருள் வந்து குடிகொள்ளும். நம்முடைய முன்னிலைமையைக் காட்டிலும் பின்னிலைமை மிகமோசமாகிவிடும். மேலும் சாலொமோன் குறிப்பிடும் போது "மனோ துக்கத்தினாலே ஆவி முறிந்துபோம்" (நீதி. 15:13) என்கிறார். மனதுக்கத்தோடு ஜீவிக்கிறவர்கள் ஆவியில் தொய்ந்து போய் நிலைகுலைந்து காணப்படுவார்கள். சிலர் சீக்கிரத்தில் மரித்தும் போய்விடுவார்கள். ஆவியில் குற்றமற்றிருக்கும் போது சந்தோஷம் நிலைவரப்படும். ஆவியில் பயமில்லாமல் ஜீவிக்கவும் முடியும். இது நம்மை கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தப்படுத்தும்.

ஆத்தும ஜீவியமென்றால் எல்லோரும் அறிந்த ஒன்றே. பரிசுத்த வேதாகமத்தில் ஆத்துமாவில் குற்றம் செய்த ஒருவனைக் குறித்து வாசிக்கின்றோம். "ஆத்துமாவே உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகப் பொருட்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்து சொல்லிக் கொண்டான்" (லூக்கா 12:19). இவனுடைய நிலைமை என்னவாயிற்று. தன் ஆத்துமாவை நேசித்து சேர்த்த எல்லாவற்றையும் இழந்தான். இதே நிலைமையை இன்றைய நாட்களில் அநேகருடைய வாழ்க்கையில் காண்கிறோம். "குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்" (1 யோவான் 5:12). ஒருவன் கிறிஸ்துவை தன் ஆத்துமாவில் ஏற்றுக் கொள்ளாமலிருந்தால் அந்த ஆத்துமா கைவிடப்படும். ஆகையால் தான் குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன் என்று வாசிக்கின்றோம்.

ஆத்துமா பிழைக்க வேண்டுமென்றால், பரிசுத்த வேதம் கூறுவதை கவனியுங்கள். "உங்கள் செவியைச் சாய்த்து என்னிடத்தில் வாருங்கள்: கேளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும்" (ஏசாயா 55:3). ஆண்டவரிடத்தில் வந்த அனைவரும் சுகமானார்கள். அவரிடத்தில் கேட்டதைப் பெற்றுக் கொண்டார்கள் என்று சுவிசேஷ புஸ்தகத்தில் வாசிக்கின்றோம். நம்முடைய ஆத்துமாவை கறைபடுத்துவது மாமிச இச்சையே. இதை முதலாவது வெறுத்துத் தள்ளவேண்டும். இது ஆத்து மாவுக்கு விரோதமாய் போர் செய்கிறதென்று 1 பேதுரு 2:11ல் வாசிக் கின்றோம். ஆகையால் பிரியமான சகோதரனே, சகோதரியே உங்கள் ஆத்துமாவில் குற்றமற்ற ஜீவியம் செய்து "உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக் கொள்ளுங்கள்" (லூக்கா 21:19).


> "தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப் பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது"
>
> *(2 நாளாகமம் 16:9).*

சரீர ஜீவியம் என்பது நம்முடைய நடைமுறை வாழ்க்கையைக் குறிக்கிறது. அனுதினமும் அழிந்து போகிற இந்த சரீரத்தைக் தூக்கிக் கொண்டு அங்குமிங்கும் செல்கின்றோம். சரீர ஜீவியத்தில் தான் அநேகர் குற்றம்

செய்து வீழ்ந்து போகின்றனர். இதற்குத் தப்பித்துக் கொள்ள ஒரே வழி கிறிஸ்துவின் சரீரத்தைத் தரித்துக் கொள்வது. அது எப்படி முடியும் என்று கேட்கிறீர்களா? ஒருவன் பாவத்திற்குச் செத்து நீதிக்குப் பிழைக்கும் போது அவன் கிறிஸ்துவின் சரீரமான சபையில் அங்கம் வகிக்கின்றான். அப்பொழுது கிறிஸ்துவின் சரீரமாயிருக்கின்றான். ஆகையால் தான் பவுல் கொரிந்து சபைக்கு எழுதும்போது "உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று அறியீர்களா? அப்படியிருக்க, நான் கிறிஸ்துவின் அவயங்களை வேசியின் அவயவங் களாக்கலாமா? அப்படிச் செய்யலாகாதே" (1 கொரி. 6:15). தவறு செய்யும் போது கிறிஸ்துவை முதலாவது நினைவில் கொள்ளுங்கள். கிறிஸ்து பாவம் செய்வாரா? இல்லையே. அப்படியிருக்கும் போது நீங்கள் செய் தால் கிறிஸ்துவின் நாமம் புறஜாதிகள் மத்தியில் தூஷிக்கப்படுமே. "ஆகையால் விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாரா தனையான பொருளாசை ஆகிய இவைகளை பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப் போடுங்கள்" (கொலோ. 3:5).

தேவனைத் துதிப்பதற்கும் சபை ஆராதனையில் பங்கு பெறுவதற்கும் சரிரம் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. நாம் ஆவிக்குரிய ஆராதனை செய்தாலும் சரீரத்தோடே சென்று தான் ஆராதிக்கின்றோம். காணிக்கை கொடுக்கும்போது இருதயத்தில் தீர்மானித்து வலது கையின் மூலம் காணிக்கை கொடுக்கிறோம். ஆகு, கைகள் பரிசுத்தமுள்ளதாக இருக்க வேண்டும். அநேக இரத்தத்தை சிந்தின தாவீது, அவருக்கு ஆலயம் கட்ட முடியாமல் போய்விட்டது. காணிக்கையில் ஒரு பகுதியை வஞ்சித்து வைத்த அனனியா, சப்பிராள் உடனே மரித்து போய்விட்டனர். இது தேவசத்தம் என்ற ஜனங்களுடைய வார்த்தையைக் கேட்ட ஏரோது பெருமை கொண்டு மரித்தான். இன்னும் எத்தனையோ பேர் சரீர ஜீவியத்தில் குற்றம் செய்து தேவ தண்டனைக்குள்ளானார்கள். பிரியமான சகோதரனே, சகோதரியே உன் சரீர வாழ்வை காத்துக் கொள். கர்த்தர் வருகிறார்.

ஆவி, ஆத்துமா, சரீரம் இம்மூன்றும் ஒன்றாகவே இருக்கிறது. இம்மூன்றிலும் நாம் தவறு செய்யாது குற்றமற்ற ஜீவியத்தைச் செய்ய வேண்டுமென்று பார்த்தோம். இம்மூன்றிலுமே நம்மை வஞ்சிப் பதற்குப் பிசாசு எப்பொழுதும் ஆயத்தநிலையில் உள்ளான் என்பதை நீங்கள் முந்தி அறிய வேண்டும். ஆவியில் மட்டும் ஆயத்தமாகயி ருந்தால் போதுமென்று நீங்கள் இருந்துவிடாதீர்கள். முற்றிலும் உங் களைக் காத்துக் கொள்ள வேண்டியது அவசியமென வேத ஆதாரத்துடன் பார்த்தோம். நாம் ஒன்றிலும் தவறு செய்யாதிருக்கும் போது நமக்கு பயமில்லை, எந்த விதமான சந்தேகமு மில்லை. கர்த்தர் இப்பொழுது வந்தாலும் நான் அவரோடு மகிமையில் பிரவேசிப்பேன் என்ற ஓர் நிச்சயத்தோடு குற்றமற்ற ஜீவியம் செய்வோம். "இவ்விதமாய் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும் போது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக!" *(1 தெச. 3:13).*



# இரட்சிக்கப்பட ஒருவன் என்ன செய்ய வேண்டும்?

## WHAT ONE MUST DO TO BE SAVED?

"எல்லாரும் பாவஞ் செய்து ..." (ரோமர் 3:23), "அந்தப்படியே நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" (ரோமர் 3:10), "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23). இப்படியாக, இதேபோன்ற ஒத்த வசனங்கள் பலவற்றை தொடர்ந்து கூற இயலும். இந்நிலையில் தனக்கு தேவன் இன்றி, நம்பிக்கை ஏதுமின்றி மனிதன் வாழ்ந்துபோய், பாழாய்ப் போயிருப்பதை தான் இவையனைத்தும் குறிப்பிட்டுக் காட்டுகின்றன. எனவே, மனிதன் எப்படி இரட்சிக்கப்படக்கூடும்? அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்திற்கு நாம் திரும்பினால் அங்கே காணமுடியும்.

மனந்திரும்புவது பற்றிய பதினொரு நிகழ்ச்சிகள் அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இடம் அனுமதித்திருந்தால், அவைகளில் ஒவ்வொன்றையும் பரிசீலித்து, இரட்சிக்கப்பட அவர்கள் என்ன செய்ய வேண்டியிருந்தது என்பதைக் கண்டுபிடித்திருக்கலாம். ஆனால் இந்தப் பாடத்தில் மூன்று நிகழ்ச்சி களைப் பற்றி மட்டுமே நாம் கவனிப்போம். ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் அதே கேள்வி கேட்கப்பட்டு, அதே பதில் கொடுக்கப்பட்டுள்ளது. "இரட்சிக்கப்பட நான் என்ன செய்ய வேண்டும்?" என்ற அடிப்படையில் அக்கேள்வியாகும். இப்பொழுது, அதற்கு என்ன பதில் என்பதை ஒன்றன் பின் ஒன்றாக கண்டுபிடிக்க முயற்சிப்போம்.

**1. "நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" (அப்போஸ்தலர் 2). பெந்தெகொஸ்தே நாளிலே மக்கள் இந்தக் கேள்வியைக் கேட்டனர்.**

இங்கே அவிசுவாசிகளான ஒரு மக்கள் கூட்டத்தோடு பேதுருவும், பிற அப்போஸ்தலர்களும் விவாதித்துக் கொண்டிருக்கின்றனர். கிறிஸ்துவை சிலுவையில் அறைந்ததில் அவர்களில் பலருக்குப் பங்குண்டு. எனவே, முதல் முதலாக கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பதை அவர்கள் ஒப்புக்கொள்ளச் செய்ய வேண்டியதாக இருந்தது. இதைச் செய்ய, கிறிஸ்து அவர்கள் மத்தியில் செய்திருந்த அற்புதங்கள், அடையாளங்கள், ஆச்சரியமான காரியங்களையெல்லாம் பேதுரு அவர்களுக்கு நினைப்பூட்டினார். பின்னர், கிறிஸ்து சிலுவையில் ஆணிகளால் அறையப்பட்டிருந்தார் என்பது மட்டுமன்றி, அவர் அடக்கம் பண்ணப்பட்டு, மூன்று நாட்களுக்குப் பின் உயிர்த்தெழுந்தார் என்பதும், அவர்களில் பலருக்குக் காட்சியளித்திருந்தார் என்பதும், பின்னர் மீண்டுமாக பரலோகத்தின் பிதாவினிடத்தில் அவர் பரமேறிச் சென்றார் என்பதும் அவர்களுக்குச் சொல்லப்பட்டது. இறுதியாக, கிறிஸ்துவைப் பற்றி சொல்லப்பட்டிருந்த பல தீர்க்கதரிசனங்களை அவர் நிறைவேற்றியிருந்தார் என்ற உண்மையும், குறிப்பாக அவர் வருகையைப்

பற்றி தாவீது முன்னுரைத்திருந்ததும், இவ்வேளையில் கிறிஸ்து தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருப்பதும் வலியுறுத்தப்பட்டது.

"இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும், மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும் என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது" (அப்போஸ்தலர் 2:37-39). பதிவேடு தொடர்ந்து குறிப்பிடுகிறது: பின்னர் "அவனுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையதினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்" (அப்போஸ்தலர் 2:41). பின்னர், ". . . இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டுவந்தார்" என அப்போஸ்தலர் நடபடிகள் 2:47ம் வசனம் கூறுகிறது.

> விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்
> மாற்கு 16:16

நற்செய்தி போதிக்கப்பட்டது, அதை அவர்கள் விசுவாசித்தனர், மனஸ்தாபப்பட்டனர், அவர்களின் பாவங்கள் மன்னிக்கப்பட திருமுழுக்குப் பெற்றனர் என்பதை தயவுசெய்து கவனியுங்கள். ஆகவே என்ன நடந்தது? அவர்கள் இரட்சிக்கப்பட்டு கர்த்தரின் சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

**2. "ஆண்டவரே, நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்?" என்ற கேள்வியை சவுல் கேட்டான் (அப்போஸ்தலர் 9, 22).**

இதோ இங்கே ஒரு மனிதன் இருந்தான். அவன் கர்த்தருடைய சபையை பாழடிப்பதற்காக தனது சக்திக்குட்பட்ட சகலவற்றையும் செய்து கொண்டிருந்தான். தமஸ்கு பட்டணத்துக்கு அவன் பயணமாக சென்றபோது கர்த்தர் அவனுக்குத் தோன்றினார். "அவன் பிரயாணமாய்ப் போய் தமஸ்குவுக்கு சமீபித்தபோது, சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றி பிரகாசித்தது; அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது: சவுலே, சவுலே நீ ஏன் என்னை துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான். அதற்கு அவன்: ஆண்டவரே நீர் யார்? என்றான். அதற்கு கர்த்தர்: நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார். அவன் நடுங்கி திகைத்து: ஆண்டவரே, நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்? என்றான். அதற்கு கர்த்தர்: நீ எழுந்து பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார்" (அப்போஸ்தலர் 9:3-6). எப்படி அவன் நகரத்துக்குள் சென்றான் என்றும், பார்வையிழந்த நிலையில்

உபவாசத்தோடும், ஜெபத்தோடும் மூன்று நாட்களும் அங்கு எப்படி கழித்தான் என்பதாக அந்த நிகழ்ச்சி தொடருகிறது.

சவுலிடம் போய், அவன் செய்ய வேண்டியது என்ன என்று கூற, அனனியாவுக்கு கர்த்தர் எப்படி கற்பித்தார் என்பது பற்றியும் பதிவேடு கூறுகிறது. பின்னர் நடந்தவற்றை பவுல் விசாரிக்கும் போது, அனனியா தன்னிடம் வந்து கூறியதைச் சொன்னார்: "இப்பொழுது நீ தாமதிக்கிறது என்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றார்" (அப்போஸ்தலர் 22:16).

இப்பொழுது, சவுல் எப்பொழுது இரட்சிக்கப்பட்டான்? கர்த்தர் அவனுக்குத் தோன்றிய வேளையில் என்பதாக சிலர் சொல்லுகின்றனர். ஆனால் நகரத்திற்குள் செல்லவும், அவன் செய்ய வேண்டியது அங்கே கூறப்படும் என்று கர்த்தர் அவனிடம் சொன்னார். ஜெபத்தின் வழியாக அவன் இரட்சிக்கப்பட்டான் என்று சிலர் கூறுகின்றனர். அது உண்மையாக இருந்தால் அவன் பாவங்கள் கழுவப்பட, எழுந்து, திருமுழுக்கு பெற்றுக்கொள் என்று அனனியா அவனிடம் ஏன் சொன்னான்? உண்மையென்னவென்றால், பெந்தெகொஸ்தே நாளில் எப்படி மக்கள் இரட்சிக்கப்பட்டார்களோ, அவ்விதமாகவே அவனும் இரட்சிக்கப்பட்டான். அவன் நற்செய்தியை கேட்டான், அதை விசுவாசித்தான், தனது பாவங்களிலிருந்து மனந்திரும்பினான், கர்த்தரை தேவனுடைய குமாரனென ஏற்றுக்கொண்டான், தனது பாவங்கள் மன்னிக்கப்பட திருமுழுக்குப் பெற்றான்.

3. **"ஆண்டவமாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என பிலிப்பிய சிறைச்சாலைக்காரன் சத்தமாகக் கேட்டான்.**

பவுலும் சீலாவும் அடிக்கப்பட்டு, சிறையிலடைக்கப்பட்டனர். அவர்கள் அற்புதமாக விடுவிக்கப்பட்டிருந்தனர்; கைதிகள் தப்பிவிட்டதாக சிறைச்சாலைக்காரன் பயந்துபோய், உள்ளே விரைந்து வந்து பார்த்தான். கட்டுண்டவர்கள் ஓடிப்போனார்கள் என்று எண்ணி, பட்டயத்தை உருவி தன்னைத்தானே கொலை செய்து கொள்ளப் போனான். பவுல் மிகுந்த சத்தமிட்டு, "நீ உனக்குக் கெடுதி ஒன்றும் செய்து கொள்ளாதே, நாங்கள் எல்லாரும் இங்கேதான் இருக்கிறோம் என்றான். அப்பொழுது அவன் தீபங்களைக் கொண்டுவரச் சொல்லி, உள்ளே ஓடி நடுநடுங்கி, பவுலுக்கும் சீலாவுக்கும் முன்பாக விழுந்து," (அப்போஸ்தலர் 16:28,29). இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்று கேட்ட பின்பு, "அதற்கு அவர்கள்: கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி. அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி," (அப்போஸ்தலர் 16:31) கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள். இப்பொழுது, இந்த இடத்தில் பலர் நிறுத்திக் கொண்டு இம்மனிதன் இரட்சிக்கப் படுவதற்கு இதெல்லாம்தான் தேவையாயிருந்தன என கூறுகின்றனர். ஆனால் இது தொடக்கம் மட்டுமே. யார் அந்த மனிதன். அவன் ஒரு அவிசுவாசி. எனவே, முதலில் அவன் விசுவாசிக்க வேண்டியது

அவசியமாயிற்று. மேலும் அதை சாத்தியமாக்க பதிவேடு தொடர்வது போல, "அவனுக்கும், அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள். மேலும் இராத்திரியில் அந்நேரத்திலேதானே அவன் அவர்களை அழைத்துக் கொண்டுபோய், அவர்களுடைய காயங்களைக் கழுவினான். அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள். பின்பு அவன் அவர்களை தன் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டுபோய், அவர்களுக்குப் போஜனங்கொடுத்து, தன் வீட்டாரனைவரோடுங்கூட தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாகி மனமகிழ்ச்சியாயிருந்தான்" (அப்போஸ்தலர் 16:32-34). இப்பொழுது இம்மனிதனும், அவனுடைய குடும்பத்தாரும் என்ன செய்தனர்? "கர்த்தருடைய வசனத்தை அவர்கள் கேட்டபோது, அவர்கள் அதை விசுவாசித்தனர். ஆனால் கர்த்தரால் என்ன கட்டளை கொடுக்கப்பட்டது? விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16:16). கர்த்தரின் வார்த்தையைக் கேட்டதின் விளைவாக, அம்மனிதன் கைதிகளின் காயங்களைக் கழுவி, தனது மனந்திரும்புதலைக் காட்டினான். அதேநேரத்தில் திருமுழுக்கும் பெற்றுக் கொண்டான். பவுல் போதித்த செய்தியின் பகுதியாக இக்கட்டளைகள் இருந்தன. இல்லையென்றால், சிறைச்சாலைக்காரன் ஒருபோதும் அவர்கள் கூறியதை கேட்டிருக்க மாட்டான்.

இப்போது, இரட்சிக்கப்பட இன்று ஒருவர் என்ன செய்ய வேண்டும்? அன்று செய்த அதேபோன்று தான். சத்தியத்தை ஒருவர் கேட்கவும், அதை விசுவாசிக்கவும், தனது பாவங்களுக்காக மனஸ்தாபப்படவும், கிறிஸ்துவை அறிக்கையிடவும், திருமுழுக்கு பெறவும் வேண்டும் எபிரெயர் 11:6; ரோமர் 10:10; லூக்கா 13:3; அப்போஸ்தலர் 17:30; மத்தேயு 10:32; மாற்கு 15:16; மேலும் அப்போஸ்தலர் 2:38 ஆகிய வசனங்களைப் படியுங்கள்.

*J.C. Choate*

தமிழில் எஸ்.எஸ்.ராஜன்.

## ஜெபிப்போம்

"ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள்"

— யாக்கோபு 5:16

★ வேடசந்தூர் பகுதியில் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற சகோ. சந்தியாகு, சகோதரிகள். கீதா, மரியம்மாள், அல்போன்சம்மாள் இவர்களுடைய கிறிஸ்தவ ஜீவியத்திற்காக.

★ நமது "கிறிஸ்துவின் வசனம்" வாசகர் 1000 பேருக்காக.

★ இவ்வுலகின் கிறிஸ்துவின் சபையில் பணியாற்றுகிற ஒவ்வொரு ஊழியருக்காக, அவர்களுடைய குடும்பங்களுக்காக.

★ காலில் அடிபட்டு தேர்ச்சியடைந்து வரும் மதுரை ஊழியர் A.S. ஜானுக்காக.

★ இப்பத்திரிக்கை வெளிவர பேருதவியாக இருக்கும் சகோ. J.C. சோட் குடும்பத்திற்காக.

வேண்டும், அந்த அதிகாரி அவருக்குக் கீழிருக்கும் அனைத்து செயல்பாடுகளுக்கும், தலைமைத்துவத்திற்கும் பொறுப்பாளியாக இருக்கவேண்டியவனாக இருக்கின்றான். ஏனெனில் மனுஷன் முதலாவது உருவாக்கப்பட்டான். அவன் தலைமைத்துவப் பொறுப்பைப் பெற்றிருந்தான். “தலைமைத்துவம்” என்பதன் பொருளாவது, ஸ்திரீக்கு முன்சென்று அவளை சரியான பாதையில் வழிநடத்திச் செல்ல வேண்டியவனாய் இருந்தான் என்பதாகும். “பொறுப்பாளி” என்பதன் அர்த்தமாவது, அவன் தன் தலைமைப் பொறுப்பில் சரியான பாதையில் வழிநடத்திச் சென்றானா? அல்லது தவறான வழியில் நடத்திச் சென்றானா? என்பதற்குரிய பதிலை தேவனுக்குக் கொடுக்கிறவனாய் இருந்தான் என்பதாகும்.

அதேசமயம் மனுஷனுடைய தலைமைத்துவம், பொறுப்பு என்பது மனுஷி முக்கியமானவள் அல்ல என்று அர்த்தமல்ல. இவள் மனுஷனுக்காக சிருஷ்டிக்கப்பட்டவள். என்றாலும், குடும்பத்தில் மனைவியாகவும், தாயாகவும், குழந்தைகளைப் பெற்றெடுப்பவளாகவும், வளர்ப்பவளாகவும் இவள் இல்லாவிட்டால் மனிதவர்க்கத்தின் தொடர்ச்சியே இல்லாமல் போய்விடும். இவ்வாறாக தேவனுடைய திட்டத்தில் மனுஷன், மனுஷி இருவரும் ஒருவரை ஒருவர் சார்ந்துள்ளவர்களாகவும், மிக முக்கியத்துவம் உடையவர்களாகவும் இருக்கின்றனர்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

Betty Burton Choate — In Tamil J. Glory Arjunan




கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள் 1 பேதுரு 3:15.

இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் மத்தேயு 5:8.

இருதயத்தில் ஞானமுள்ளவன் கட்டளைகளை ஏற்றுக்கொள்கிறான் நீதி. 10:8.

மாறுபாடான இருதயம் என்னைவிட்டு அகலவேண்டும் சங்கீதம் 101:4.

கர்த்தரோ இருதயங்களை நிறுத்துப் பார்க்கிறார் நீதி. 21:2.

இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய் பேசும் லூக்கா 6:45.

உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடி கீர்த்தனம் பண்ணுங்கள் எபேசியர் 5:19.

சகோ. கிறிஸ்டி குமார்

## சென்ற மாத Who Am I?ன்

## விடை : எஸ்தர்

எஸ்தர் 2:2, 15; 1:1; 2:5-7; 3:1, 5, 6, 9, 10, 13; 4:16; 7:9; 8:3-8

## ஜூலை மாத இதழின் வேத அறிவுப்போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

1. J. மேரி எலிசபெத் - வத்தலகுண்டு
2. T. ஹரிகரன் - செட்டிபாளையம்
3. J. ரவிச்சந்திரன் - செட்டிபாளையம்
4. D.சிவகாமி - செட்டிபாளையம்
5. R. ரகுபதி - செட்டிபாளையம்
6. V. சாலமோன் - மேட்டுப்பட்டி
7. M. துரை அமுதன் - ஊட்டி
8. S. சம்பத்குமார் - வெள்ளக்கோவில்
9. கலையரசன் - குன்னூர்
10. A. கோபிநாத் - சேமிங்கி
11. A. ரவிச்சந்திரன் - சேமிங்கி
12. R. ஜெபர்சன் ஜேக்கப் - ஐரேனிபுரம்
13. R. பெரியசாமி - மங்களப்பட்டி
14. மேரியம்மாள் - வத்தலகுண்டு
15. M. ஜார்ஜ் வசந்தன் - இருங்களூர்
16. S. சக்திவேல் - சென்னம்பட்டி
17. G. சைலஷ்குமார் - வட்டக்காடு
18. கார்த்திகேயன் - ஊட்டி
19. பேபி - குன்னூர்
20. K. குணசேகரன் - கன்னியாகுமரி
21. G. அன்னலெட்சுமி - கன்னியாகுமரி
22. S. ஜோஸ்பின்மேரி - கன்னியாகுமரி
23. V. ஜான்பால் - கோவில்பட்டி

### 1997 ஆகஸ்டு முதல் 1998 ஜூலை வரை நடைபெற்ற வேத அறிவுப்போட்டியில் வெற்றி பெற்ற முதல் மூவர்


முதல் பரிசு : J. மேரி எலிசபெத் கலைவாணி - வத்தலகுண்டு
இரண்டாம் பரிசு : N. தானியேல் தமிழ்வாணன் - மேல்விசாரம்
மூன்றாம் பரிசு : S. ரேச்சல் அமுதமணி - மேல்விசாரம்

**மற்றும் ஆறுதல் பரிசு பெறும் 48 வாசகர்கள்**

இவர்களுக்கு பரிசுகளை தபால் மூலம் அனுப்புகிறவர் மதுரை சென்ட்ரல் கிறிஸ்துவின் சபையார் மற்றும் சபை ஊழியர் சகோ. பிலேமோன் ராஜா.

### சிந்தனைக்கு

பரிசுத்த வேதாகமத்தை 10 பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு மனதில் இருத்திக் கொள்ள ஒரு ஆலோசனை.





# திருமணம் ~ கிறிஸ்தவ குடும்பம்
# Marriage - A Christian Family

*சகோ. பிலேமோன் ராஜா*

தேவன் உலகில் உண்டாக்கிய இருபெரும் நிறுவனங்கள் அல்லது ஸ்தாபனங்கள் உண்டு. அவை

1. குடும்பம் – உறவு (திருமணத்தில் ஆரம்பம்)
2. சபை – உறவு (இரட்சிப்பில் ஆரம்பம்)

தேவன் தாம் உண்டாக்கிய யாவற்றையும் கண்டு நன்றாயிருக்கிறது என்றார்.

ஆனால் தேவன் உண்டாக்கிய எல்லாவற்றையும் உடைக்க, குறைக்க, பிரிக்க உருவானவனே பிசாசு என்னும் பழைய பாம்பாகிய சாத்தான். (1) இவன் குழப்பவாதி (2) சம்மந்தமற்ற வெளியாள் (3) அழையா விருந்தாளி (4) குற்றம் கண்டுபிடிப்பவன் (5) பொய்யன் (6) குறைகூறுபவன் (7) சந்தேகத்தை விதைப்பவன் (8) தந்திரக்காரன் (9) வார்த்தையில் ஜாலம் காட்டுபவன் (10) வாயாடி (11) நேருக்கு நேர் சந்திக்கத் திராணியில்லாதவன் (12) உள்ளே உள்ளவரை வைத்தே தன் தீய திட்டத்தை நிறைவேற்றுபவன் (13) ஆட்டுத்தோலை போர்த்திய ஓநாய். இன்னும் நிறைய கூறலாம். எனவே ஜாக்கிரதை.

வேதாகமத்தின்படியான சபையைப் பற்றி மக்கள் எவ்வாறு சரியாகப் புரிந்து கொள்ளவில்லையோ அப்படியே தேவன் உண்டாக்கி நடத்தும் குடும்பத்தைப் பற்றியும், 1. தேவன் உண்டாக்கியபடி 2. தேவ திட்டப்படி புரிந்து கொள்ளவில்லை. இது யாவரும் நிச்சயம் ஏற்றுக்கொள்ளக் கூடிய கூற்றே (எபேசியர் 5:25-31).

நம்முடைய பையில் உள்ளதை நாம் தான் சரியாக அறிந்திருக்க முடியும் அல்லது அறிந்திருக்க வேண்டும். அதுபோல தேவனுடைய திட்டத்தை அவர் உருவாக்கினதை அவரே அறிந்திருக்கிறார். எனவே அவர் உருவாக்கினதைப் பற்றி அவரிடம் (வேதத்தின் மூலம் எபேசியர் 1 : 1-2) தெரிந்து கொள்வது சிறந்தது. மனுஷனை முழுவதும் அறிந்தவர் அவரே (யோவான் 2:24,25). எப்படியெனில் மனிதனைப் படைத்தவர் அவரே (ஆதியாகமம் 1:26,27).

HMT வாட்ச் ரிப்பேர் ஆனால் HMT மெக்கானிக்கைத் தேடுகிறோம். BPL T.V. ரிப்பேர் ஆனால் BPL T.V. மெக்கானிக்கைத் தேடுகிறோம். சைக்கிள் ரிப்பேர் ஆனால் கொத்தனாரையா தேடுகிறோம்? தங்கம் பழுது பார்க்க மர ஆசாரியையா தேடுகின்றோம்? ஜடப்பொருட்களை விடவா நாம் கீழானவர்கள். நம் வீட்டு நாயுக்கும், மாட்டிற்கும் நோய் பிரச்சனையானால் மிருக வைத்தியரிடம் தானே போகின்றோம். ஆனால் மனிதனின் குடும்ப வாழ்வின் நடைமுறை பிரச்சனைகளுக்கு மனிதனைப் படைத்தவரை விட்டுவிட்டு படைக்கப்பட்டவனை அல்லவா தேடிப்போகிறோம். அப்படியானால் மனிதனே, உன் குடும்பத்தை உண்டாக்கியவரிடம் போகாமல் எங்கு போகிறாய்? (மல்கியா 2:15).

*(தொடர்ச்சியை அடுத்த இதழில் எதிர்பாருங்கள்)*

## இம்மாத வேத அறிவுப்போட்டி

முதல் ஐந்திற்கு வேதவசன ஆதாரத்துடனும், கடைசி ஐந்திற்கு வேதத்திலிருந்து விடை மட்டும் எழுதி இம்மாதம் இறுதிக்குள் அனுப்பி வைக்கவும்.

1. தூர தேசத்திலிருந்து வரும் நற்செய்தி விடாய்த்த ஆத்துமாவுக்குக் கிடைக்கும் எந்தத் தண்ணீருக்குச் சமானம்?
2. தன் தாயான மாகாளை ராஜாத்தியாயிராதபடிக்கு விலக்கிப்போட்டு, அவளுடைய விக்கிரகத்தையும் நிர்மூலமாக்கித் தகர்த்து, கீதரோன் ஆற்றண்டையிலே சுட்டெரித்துப் போட்டவன் யார்?
3. சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் என்ன ஆளாதிருப்பதாக?
4. பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே எதைப் பேசக்கடவன்?
5. அதரிசனமான தேவனுடைய தற்சொரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர் யார்?
6. எந்த இராஜாவுடைய நாட்களில் பஸ்கா சிறப்பாக எருசலேமில் ஆசரிக்கப்பட்டது?
7. வெள்ளாண்மை பிரியனாயிருந்த ராஜா யார்?
8. ஒரு வீடு தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருந்தால் அந்த வீடு நிலைநிற்குமா?
9. பேதுருவைக் கண்டுகொள்ளும்படி எருசலேமுக்குப் போய் அவனிடத்தில் பதினைந்துநாள் தங்கியிருந்த அப்போஸ்தலன் யார்?
10. நியாயத்தீர்ப்பு யாருடைய வீட்டிலே துவங்கும் காலமாயிருக்கிறது?

> நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும்; கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார். சங்கீதம் 34:19




# HEAR THE VOICE OF TRUTH
## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAY'S | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday, Thursday | 8.45P.m 9.00P.m<br>9.00P.m 9.15P.m | Box.3815<br>New Delhi - 110 049 | SUNNY DAVID |
| ENGLISH | Friday | 7.45P.m 8.00P.m | Box 3815<br>New Delhi -110049 | J.C. CHOATE |
| TELUGU | Sunday, Tuesday, Thursday | 2.00P.m 2.15P.m | Box. 80<br>Kakinada - 533 001 | JOSHUA GOOTAM |
| TAMIL | Sunday, Tuesday, Thursday | 6.45P.m 7.00P.m | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R.SWAMY |
| MALAYALAM | Friday | 3.45P.m 4.00P.m | Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034 | P.K. VARGHESE |
| KANNADA | Sunday | 1.45P.m 2.00P.m | Box. 448<br>Bangalore - 600 004 | ROBERT RATHNAKAR |

Please write to these Addresses for Bible Correspondence Course, Magazines and other Christian Literature in Language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCHES OF CHRIST.

**WORD OF CHRIST**
**MONTHLY MAGAZINE**
Regd. No. 84661 - 92
Postal Regn.No.TN/DDL/19

*Edited by B.Arjunan on behalf of Church of Christ*
2.2.102-D/5 Rajan Nagar
*Batlagundu and Printed at Novelty Press for Shanthi Printers*
**BATLAGUNDU - 624 202.**

இவ்விதழ் தேவைக்கு
இன்றே தொடர்பு
கொள்ளவும்

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன்
அழைக்கின்றோம்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.00 | மணி |
| வியாழன் | மாலை | 6.45 | மணி |



கிறிஸ்துவின் சபை
2.2.102–D/5 ராஜன்நகர்
வத்தலக்குண்டு - 624 202
திண்டுக்கல் மாவட்டம்
Phone: (04543) 23278

To

From
WORD OF CHRIST
*POST BOX NO.5*
BATLAGUNDU - 624 202
*S.INDIA.*